**MINUTS OF THE PUBLIC HEARING CONDUCTED ON 14.07.2011 AT 10.00 AM IN VELINGARAYANPETTAI VILLAGE, CHIDAMBARAM TALUK, CUDDALORE DISTRICT FOR THE PROPOSED SHIP BUILDING YARD CUM CAPTIVE PORT, PHASE - I PERTAINING TO THE UNIT OF M/s.GOODEARTH SHIPBUILDING PRIVATE LIMITED, VILLIANALLUR AND SILAMBIMANGALAM VILLAGES, CHIDAMBARAM TALUK, CUDDALORE DISTRICT.**

**PRESIDING:**

1. District Collector, Cuddalore District, Cuddalore
2. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Cuddalore.

**PARTICIPANTS:**

**I. GOVERNMENT OFFICIALS:**

1. District Revenue Officer, Cuddalore District, Cuddalore
2. Revenue Divisional Officer, Chidambaram, Cuddalore District, Cuddalore.
3. Tasildhar, Chidambaram Taluk, Cuddalore District Cuddalore.

**II. ELECTED PERSONS:**

1. Member of Legislative Assembly, Chidambaram Constituency, Chidambaram, Cuddalore District.

**III. REPRESENTATIVES OF INDUSTRIES: (Thiruvalargal)**

1. P.Kaliyaperumal, Associate Vice President (Technical)
2. Phiyush Raj, Senior Manager
3. Heerun Rasheed, Senior Manager (Legal)
4. Shi Anandh Sai, Assistant Manager
5. C.N.Kumaran, Senior Manager
6. V.P.Guru Prasad, Assistant Manager
7. K.S.Balaji, Accountant
8. S.Saravanan, Executive Officer

**IV. PUBLIC:**

366 nos of public and 4 nos of NGOs were attended the public hearing. The attendance register of the same is enclosed.

The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Cuddalore has welcomed the District Collector, Government Officials, Elected Representatives, Representatives of Industry, Representatives of Non Government Organisations and public to Public Hearing proposed for the new project of M/s.Goodearth Shipbuilding Private Limited. And also he has stated that the Public Hearing is conducted as per the guidelines of Ministry of Environment and Forest, Government of India, New Delhi and requested the District Collector to preside over the proceedings.

The District Collector has highlighted the importance of industrialization for the country and requested the public to raise their doubts and record their views about this proposed project, environmental impact of the project and the measures to be adopted to protect the environment. Further, the District Collector has stated about the guidelines of the Public Hearing and informed that this is not the forum for taking final decision and our job is only to send the heard and recorded views of all people participated in the meeting to the Ministry of Environment and Forest, Government of India, New Delhi for taking decision.

And also the District Collector has requested the representatives of the proposed project to describe about the project activities, the impact on the environment and remedial

measures to mitigate the environmental issues and after the presentation is over, the public shall record their views and doubts about the project and project representatives will answer for all the views and doubts of the public.

Further, Thiru. Shi Anandh Sai, Assistant Manager has described about the proposed project, environmental impact of the project and the measures to be adopted to protect the environment with power point presentation. The details of the proposed project is as follows.

The unit has proposed to invest Rs.300 Crore and the Phase-I will be established in an extent of 60.79 Hectares. The unit will utilize 50,000 Tons of mild steel per annum in the Phase-I and it will be extended upto 5,00,000 Tons of mild steel per annum after expansion. For the import of raw materials for the proposed project ant sailing of the built ship into the sea, the unit will establish a captive port. The unit will utilize 40 KLD of water for their domestic and industrial purposes and 70% of treated wastewater will be utilized for toilet flushing and green belt development. The unit will provide employment for 1500 people directly and 6000 people indirectly and there is no impact on the fishing and agricultural activities.

Subsequently, the District Collector has requested the public to record their views one by one by stating their name and village.

Among the public, 20 nos of persons has recorded their views and the details are as follows.

**<u>VIEWS OF THE PUBLIC:</u>**

**<u>1. Thiru.Chezhiyan, Tamilnadu Coastal Protection Federation, Killai Area:</u>**

He is the president for the 10 villages of All India Fisherman Union. He has stated that if the proposed project will be established in this area, about 10 villages located along the seashore of this area will be destroyed. The people belonged to this area are depending only on the fishing activities. Already, this area has been affected due to the establishing of M/s.Nagarjuna Oil Corporation Limited. If the company will be established in this area, the livelihood of this people and their fishing activities will be affected and the people of this area may be died. The people belonged to 28 villages of this area has not come to this meeting since the fishing activities is only the livelihood for this people. The proposed project may come only after evacuating all the people of this area. Hence, this proposed project should not come to this area.

**<u>2. Member of Legislative Assembly, Chidambaram Constituency, Chidambaram:</u>**

In page number 31 of the notification issued by the Highways and Minor Port Department, Government of Tamilnadu, it was stated that for this industry, permission has been accorded vide G.O.Ms.No:183 Dated:23.07.2009 for the establishment of ship building yard cum captive port which has been published in the Gazette Notification. Further it is stated in that page that in principle permission has been granted to establish a Single Super Phosphate Fertilizer Plant in this premises. But the Public Hearing in this place is being conducted only for the ship building yard cum captive port and no information was furnished about the details of Single Super Phosphate Fertilizer Plant. Hence, Public Hearing now conducted is not a true Public Hearing and fresh Public Hearing should be conducted for the both ship building yard cum captive port and Single Super Phosphate Fertilizer Plant after giving prior information to the public of this area.

The people of nearest village, Vellingrayanpettai has boycotted the meeting and they are not going to sea for the catch fishing for the past 5 days since the information about the Public Hearing has not properly intimated to the village people. And also about 25 village people of this area has boycotted this public Hearing meeting. After giving proper information to the public living around 10 Kilometer of this area, the Public Hearing may be conducted.

Hence, Public Hearing now conducted is not a true Public Hearing and fresh Public Hearing should be conducted after giving prior and proper information to the public of this area.

The Environmental Impact Assessment Report prepared for the Public Hearing was prepared by Chennai Anna University. But for the preparation of this report, Ministry of Environment and Forest, Government of India, New Delhi has not issued accreditation to Chennai Anna University till today. The report prepared for the Public Hearing by the unauthorized Chennai Anna University is not valid for this meeting. The Public Hearing conducted based on this report is baseless.

Already, the environment has been affected and spoiled due to the chemical industries located between Cuddalore and Periyapattu Village. In addition to that, the establishment of new industrial units such as ship building yard, thermal power plants and chemical industries, the fishing and agricultural activities to the public of 18,000 living in this area will be affected more. And also, the new industrial units will not give any employment to this people. For the above said reasons, it is requested that the Public Hearing conducted should be stopped and another Public Hearing may be conducted in next time.

**3. Thiru.Ramesh Babu, District President, Cuddalore Vazhvurimai Eyakkam:**

The Environmental Impact Assessment Report prepared for the Public Hearing was prepared by Chennai Anna University which is not an approved institution by Ministry of Environment and Forest, Government of India, New Delhi. What is the importance of establishment of new ship building yard in this place, since there is another ship building yard is located at a distance of 180 Kilometers at Kattupalli. There is no information about the impact of fishing activities, activities of the industrial unit and the raw materials used in their manufacturing activities in the executive summary prepared for this proposed project.

Further he asked that what is the necessity for giving lands to this unit without giving employment to the land losers. Why the unit will not produce current for their industrial activities and what is the necessity to get the electricity from the Tamilnadu Electricity Board for 5 MW. In the report, it was not mentioned about the sea erosion, air pollution and noise pollution and the control measures to mitigate the issues. In this report, it is not mentioned about impact and safety measures for the impact to be happened due to raising of level to the extent of 5 Meters. For the above said reasons, it is requested that the Public Hearing conducted should be stopped and rejected.

**4. Thiru.Selvakumar, Union Secretary, Pattali Makkal Katchi, Villanallur:**

The advertisement was giver in the daily newspaper, 'Dhinamani' which is not widely circulated in this area. American Scientist have informed that there is a mix of poison in the mother breast milk due to existing chemical industries located in this area. There is an information that there is sea water intrusion about 7 Kilometer radius due the mining activities of Neyveli Lignite Corporation. In addition to that there will be damage to the agricultural lands of about 10,000 Acres due to the coming up of this type of industries. There is a report that Cuddalore District is the 2$^{nd}$ place in the natural disaster such as cyclones, tsunami, etc,. The land given people for the Neyveli Lignite Corporation has been badly affected and same condition will also be prevailed here if the proposed project is established in this area. For the above said reasons, it is requested that the Public Hearing conducted should be stopped and another Public Hearing may be conducted in next time.

**5. Thiru.S.Ramanathan, Sipcot Area Community Monitoring, Semmanguppam Area:**

Without scrutinizing the Environmental Impact Assessment Report by the Ministry of Environment and Forest, Government of India, New Delhi and issuing terms of reference, conducting the Public Hearing is incorrect. Conducting the Public Hearing in the year 2011 after a period of 4 years on the Environmental Impact Assessment Report prepared in the year 2007 is incorrect.

The Environmental Impact Assessment Report was not translated fully in Tamil, but some part of the report has been translated in Tamil. He has stated that the fishing activities will be affected in this area because of the exiting and proposed captive ports. In the report,

it was not mentioned about the sea erosion and the control measures to mitigate the issues. For the above said reasons, it is requested that the Public Hearing conducted should be dropped and another Public Hearing may be conducted in next time.

**6. Thiru.V. Ramalingam, V.Panjankuppam Village :**

He has stated that most of the times, the media and press are not giving true picture and informations to the public on the impact of the new projects. When the informations shared in the fair manner, the loss of the community will be minimized. Before 2005, the people who are living in this area has enjoied peacefull and healthy lives. Providing and selling of the land to the new project was not voluntary, it is done through some agents and mediators and he has stated that it is not a good practice for land purchase.

**7. Thiru.Shajahan, Parangipettai :**

New dieseas are affecting the people and old dieseas are reappear in the recent days and the people are affecting in the large extend, due to the near by SIPCOT Industrial Complex. Presently, the previllance of cancer among the people are increasing. In this area fish resources are fastly depleting. Further, he has stated that for the prosperity of one individual, a lakhs of people going to be affected. And also he has stated that the cost should be respect the sentiments of the people and requested to drop the proceeding of this meeting further.

**8. Thiru.Risayad Ali, Parangipettai :**

He has stated that about of 10 deaths, 8 people are died due to cancer in this area. Further, he stated that to kill the people living in this area by allowing this type industries like Hitler has killed the people by using the poisionous gas in the closed room. He has requested to not to establish any hazardous type of industries in the Parangipettai area.

**9. Thiru.Tamilselvan, V.Panjankuppam Village :**

He has stated that the proposed industry has provided fencing around the premises. Due to this activities, the cattle in this area are finding difficult for rearing. Further, he has stated that this type of industries should not be located in this area.

**10. Thiru.Mohamed Naina, Parangipettai :**

He has stated that 25 years ago, the Kudikadu village is the source of drining water for the people, and the water table has come down drastically due to the more and more industries are accomodated in the SIPCOT Industrial Estate. Due to that the people are migrated to the near by areas. Due to pollution related disease by the SIPCOT industries, new born babies face out of some disability in their growth. When the medical camps are conducted, the cause of the disease are not reported properly by the authorities and the authorities are giving NIL report in favour of the industrial units.

In the report, it is stated that 70 % of the treated waste water will be utilized for toilet flushing and for green belt development and there is no information about the remaining 30 % of waste water. And also he has stated that frequent arrival and sailing of ships, there will be a vibration in that area and affect the fish resource. Due to this the fish catching will be largely affected in the area. He has requested to not to establish any hazardous type of industries in the area.

**11. Thiru.V.M. Sekar, CPIM, District Executive Member :**

He has stated that Public Hearing notification and announcement made through news paper was not available in this area. In the report of the project, there is no details about the extent of land used for this project and cost of the project.in the vernacular language of Tamil. Further, he has requested to give the terms and conditions stipulated for this project by TamilNadu Pollution Control Board. The informations about the projects

should be in Tamil so that the people linving in this area can understand the impact about the project.

And also he has stated that most of the banned industries throughout the world have established in SIPCOT Industrial Estate, Cuddalore. The District authorities / Government officials in the Cuddalore should stay in the SIPCOT Industrial Complex, so that they can feel the impact of pollution. He has requested that the public hearing conducted should be dropped and reconduct the another public hearing after providing all the informations in Tamil.

**12. Thiru.Madhavan, Environmental Protection Organisation :**

He has stated that the conducting the public hearing is a kind of cheating and misleading the people since the public hearing is conducted only for the ship building activity hiding the another fertilizer factory as stated by the Member of Legislative Assembly, Chidambaram Constituency. The people are loosing their lives because of the industrialization from Puduchery to Parangipettai. The employee of industries are died in an accident happened at M/s.TANFAC Industries Limited. There is no medical treatement facility in this area for the people. The people are affected by various diseas since the pollution created by the chemicals industries. As this type of industries are affecting the day to day life activities of the people, he has requested that the public hearing conducted should be dropped and this type of industry should not be located in this area.

**13. Thiru.Asokan, District Secretary, Democratic Youth Federation of India. :**

He has stated that the public hearing is an eye wash as reported earlier. The educated and unemployed youth are migrating to nearby towns and districts for searching employment. He has stated that the industries are not giving employment to local people and the industries wants only land, soil and water of this area. He has requested that the public hearing conducted should be dropped and this type of industry should not be located in this area.

**14. Thiru.Arulselvan, Member, SIPCOT Area Community Monitoring, Cuddalore.**

He has stated that as per the study report conducted during 2009 by the Ministry of Environment and Forests and Central Pollution Control Board, Government of India it was stated that Cuddalore SIPCOT Industrial Complex has placed in the $16^{th}$ position in pollution nature. The conducting of public hearing in the year 2011 by the Environment Impact Assessment Report prepared and submitted by the industry during the year 2007 is objectionable since the environmental parameters are varied in nature from the year 2007 to 2011.

The Environment Impact Assessment Report report was prepared by the Anna University, Chennai which was not accreditiated by Ministry of Environment and Forests, Government of India and hence the public hearing conducted should be rejected. In the report, there is no information about water consumption and discharged and natural disasters. Further, Mangrove Forests is being destroyed at present which is protecting the global warming. Since there is no information was given to the public through dom dom, this public hearing is not being conducted as per the regulations and requested to drop and reject the proceeding further.

**15. Thiru.Anandhavelu, Secretary, Block Level Youth Wing, DMDK, Villianallur:**

He has informed that the people assembled here have not come to express their grievance rather only money has made them to attend. He also has stated that the project authorities had supressed information on the actual proposal of ship building activity and Single Super Phasphate in the site and instead public hearing is conducted only for ship building activity hiding the coming up of Single Super Phosphates as pointed out by Member of Legislative Assembly, Chidambaram Constituency and it is not able to understand why this public hearing is still continuing.

**16.Thiru.Tamilshankar, Villiyanallur :**

He has informed that earlier an agitation was made against a unit of Semmankuppam village by Human Right Kazhagam where the people in the Human Right Kazhagam were arrested. He also has stated that if this is the case what will be the fate of ordinary people. Hence, he has stated that instead of spoiling hour day to day bread with poison, the people are in need of justice.

**17. Karpagaselvam, Killai Town Panchayat Counsilar.**

He has asked whether the impact assessment study conducted for this project has covered the Pitchavaram Mangrove Forests and added that the coming up of this project will affect the forests cover and hence proposal of the project may be cancelled. Also he has stated that the public have come here to express the views for the ship building project and after coming here it was understood that two projects has been proposed including single super phosphate and hence this seems to cheat the public. It was also expressed that untreated trade effluent from the project shall not be allowed to be discharged into sea and also added that since Mangrove Forests which acts as a natural barrier to control natural calamities such as Tsunami this project shall not be allowed in this area.

**18. Nizamudin, Parangipettai.**

He has stated that as of now all the views expressed by the publit is against the comming up of this project. He has added that even though governments consistently encourage on green cover development, some peope destroy and cut trees and hence he asked that for the benefit of few people why people of this area should suffer. He also said that industries in SIPCOT, Nagarjuna Oil Refinery initially assured to give top opportunity in employment for the local public and hence the statistic on this has to be revealed to know how much job opportunities has been given after coming up of the industries. He has added that what action has been taken to control odour nuisance arising from SIPCOT Industries. He has said that Government is to safe guard the public and hence requested to cancel this public hearing.

**19. Govindaraj, V.Panjakuppam :**

He has stated that 90% of the people are very poor farmers and illitrates in this area. He has expressed that now the area is being converted to grave yard, there is no scope for the livelyhood for the people if this project is permitted.

**20. M. Nizamudin, Executive Secretary, TamilNadu Consumer Federation :**

He has stated that people in coastal area have not attended this public hearing and hence the Collector has to reconduct the public hearing some other day so that coastal people views shall also be obtained on this project. He has stated that a combined impact assessment study is to be carried out taking into account on all the impacts of the new projects proposed in this area and already necessary guidlines is also issued by the Central Government in this regard. He has also added that since thousands and thousands of tons of sand is proposed to be removed due to dredging activity, there is a possibility for threat to the nature living species found between Cuddalore and Parangipettai which has also been given as a written representation. Hence, he has requested that this project may not be permitted in this area and to safeguard the agriculturist and fisheman of this area.

In response to the views and questions raised by the public, Thiru.Shri Anand Sai, Assistant Manager, M/s.Goodearth Shipbuilding Private Limited has stated that this public hearing is only for the ship building and port activity and not for chemical fertilizer plant. And also he has informed that the notice of public hearing has been published in news papers and also informed to the villages through mikeset arrangements and banners. He has also added that Centre for Environment Studies, Anna University, Chennai has prepared the EIA report during 2007 and at that time no approved consultant list was in force and only in the year 2010, the Ministry of Environment and Forests has published the approved consultant to conduct Environment Impact Assessment Study.

At the end, the District Collector has stated that all the views expressed by the public during the public hearing including on proper communication not given to the public on this public hearing, Environment Impact Assessment Report prepared by Anna University which is not approved by Ministry of Environment and Forests Government of India etc, will be recorded and sent to the concerned authority for taking further action. The District Collector also stated that this forum has no power to decide on the coming up of this project and only to record and forward the public hearing proceedings to the concerned authority.

With this, the meeting came to an end.

Sd/-xxxxxxxx 27.07.2011
District Collector,
Duddalore District,
Cuddalore.

-/ True copy /-

Sd/-xxx 02.08.2011.
District Environmental Engineer,
TNPC Board, Cuddalore.

திருவாளர்கள் குட் எர்த் ஷிப் பில்டிங் பிரைவேட் லிமிடெட், வில்லியநல்லூர் மற்றும் சிலம்பிமங்களம் கிராமங்கள், சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம், கப்பல் கட்டும் தளம் மற்றும் துறைமுகம் நிலை – I அமைக்க உத்தேசிக்கப்பட்டு அதன் தொடர்பாக 14.07.2011 அன்று காலை 10.00 மணிக்கு வேலங்கராயன்பேட்டை கிராமத்தில் நடைபெற்ற மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை விபரங்கள்.

முன்னிலை வகித்தவர்கள் :

1. மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் மாவட்டம், கடலூர்.
2. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கடலூர்.

கூட்டத்தில் பங்குகு பெற்றவர்கள் :

I. அரசு அதிகாரிகள் :

1. மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர் மாவட்டம், கடலூர்.
2. கோட்டாட்சியர், சிதம்பரம், கடலூர் மாவட்டம், கடலூர்.
3. வட்டாட்சியர், சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம், கடலூர்.

II. மக்கள் பிரதிநிதிகள் :

1. சட்டமன்ற உறுப்பினர், சிதம்பரம் சட்டமன்ற தொகுதி, சிதம்பரம், கடலூர் மாவட்டம்.

III. தொழிற்சாலை பிரதிநிதிகள் :

திருவாளர்கள்

1. பி. கலியபெருமாள், இணை துணை தலைவர் (தொழிற் நுட்பம்).
2. பியூஷ் ராஜ், முதுநிலை மேலாளர்.
3. ஹீரூன் ரஷீத், முதுநிலை மேலாளர் – சட்டம்.
4. ஸ்ரீ ஆனந்த சாய், உதவி மேலாளர்.
5. சி.என்.குமரன், முதுநிலை மேலாளர்.
6. வி.பி.குருபிரசாத், உதவி மேலாளர்.
7. கே.எஸ்.பாலாஜி, நிறுவன கணக்காளர்.
8. எஸ்.சரவணன், செயல் அலுவலர்.

IV. பொதுமக்கள்:

366 எண்ணிக்கை பொதுமக்கள் மற்றும் 4 எண்ணிக்கை சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். வருகை பதிவேடு இணைப்பு I–ன் மூலம் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கடலூர் அவர்கள் புதியதாக அமையவுள்ள தி/ள். குட் எர்த் ஷிப் பில்டிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் "மக்கள் கருத்து கேட்புக் கூட்டம்", மைய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசாணையின்படி நடைபெறுகிறது என்றும், கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட ஆட்சித்தலைவர், அரசு அதிகாரிகள், தொழிற்சாலை நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஆகிய அனைவரையும் வரவேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை இக்கருத்துக் கேட்பு கூட்டத்தினை துவக்கிவைத்து தலைமையேற்று நடத்தி தருமாறு கேட்டுக்கொண்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தனது உரையில் நாட்டின் தொழில் வளர்ச்சியின் அவசியம் குறித்தும் இப்பகுதியில் அமையவுள்ள இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்தும் இந்நிறுவனத்தின் செயல்பாட்டினால் இப்பகுதியில் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை எடுத்துரைக்குமாறும் கேட்டுக்கொண்டார். மேலும், இக்கூட்டம் கூட்டப்பட்டதின் அவசியத்தையும், முடிவு எடுக்கும் அதிகாரம் இக்கூட்டத்திற்கு இல்லை என்றும், இக்கூட்டத்தின் கருத்துக்களை பதிவு செய்து மைய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனம் அமைச்சகத்திற்கு மேல்நடவடிக்கைக்காக அனுப்பப்படும் என்றும் தெரிவித்தார். தற்பொழுது தொழிற்சாலை நிர்வாகத்தினர் தங்கள் நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்தும், அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கம் பற்றியும், அதனை தடுக்க மேற்கொ–ள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் விளக்கப்படங்களுடன் விளக்குவார்கள். அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்றும் அதற்கு தொழிற்சாலை நிர்வாகிகள் பதிலளிப்பார்கள் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

இதனைத் தொடர்ந்து நிறுவனத்தின் சார்பாக ஸ்ரீ ஆனந்த சாய், உதவி மேலாளர் திட்டம் பற்றிய விளக்கத்தினை ஒலி மற்றும் ஒளித்திரையின் மூலம் கீழ்க்கண்ட விபரங்களை தெரிவித்தார்.

சுமார் 300 கோடி ரூபாய் செலவில் 60.79 ஹெக்டேர் நிலப்பரப்பில் கப்பல்கள் கட்டப்படும் தளம் அமைக்கப்படும் எனவும், முதலில் 50000 டன் / ஆண்டொன்றிற்கு இரும்புப் பொருட்கள் உபயோகப்படுத்தப்படும் என்றும், மேலும் இத்திட்டத்தின் விரிவாக்கத்தின்போது இது படிப்படியாக உயர்த்தப்பட்டு 500000 டன் / ஆண்டொன்றிற்கு இரும்பு பொருட்கள் உபயோகப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார். இத்திட்டத்திற்கு தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கும், கட்டப்பட்ட கப்பல்களை கடலினுள் செலுத்துவதற்கும் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கும் இத்திட்டத்துடன் இணைந்த துறைமுகப் பகுதி ஒன்று அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும், இத்திட்டத்திற்கு நாளொன்றுக்கு 40 கிலோ லிட்டர் தண்ணீர் தேவைப்படும் என்றும் இத்திட்டத்தில் உருவாகும் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு 70 சதவீதம் நீர் மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்தப் போவதாகவும் தெரிவித்தார். இந்நிறுவனம் அமைவதால் நேரடியாக 1500 பேரும் மறைமுகமாக 6000 பேரும் வேலைவாய்ப்பு பெறுவர் என்றும், இந்த திட்டத்தினால் மீனவர்களுக்கோ, விவசாயிகளுக்கோ அல்லது சு ற்றுச்சூழலுக்கோ எந்தவொரு பாதிப்பும் வராது என்றும் உறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் தங்களின் கருத்துக்களை ஒருவர் பின் ஒருவராக பெயர் ம ற்றும் ஊர் பற்றிய விபரங்களுடன் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

பொதுமக்களில் 20 நபர்கள் தங்கள் கருத்துக்களை வாய்மொழியாக கீழ்கண்டவாறு தெரிவித்தனர்.

<u>மக்களின் கருத்துக்கள் :-</u>

<u>1. செழியன் (கிள்ளைப் பகுதி தமிழக கடலோர பாதுகாப்பு இயக்கம்) :</u>

அகில இந்திய மீனவர் யூனியன் என்கிற 10 கிராமங்களுக்கும் நான் தலைவர். இந்த தொழி ற்சாலை இங்கே ஆரம்பித்தால் இங்கே சுற்றுயுள்ள 10 கிராமங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதாரம் அழிக்கப்பட்டுவிடும். இந்த கிராமங்கள் கடல் சார்ந்த மீன்பிடித் தொழிலை நம்பியுள்ளனர். ஏற்கனவே இங்கே சிப்காட் பகுதியில் உள்ள நாகார்ஜுனா கெமிக்கல் தொழிற்சாலையால் சுற்றுச்சூழல் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த கம்பெனி இங்கே வந்துவிட்டால் எங்கள் வாழ்வாதாரம், மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டு குடும்பம் எதுவும் இல்லாமல் இறக்கத்தான் நேரிடும். இந்த கூட்டத்திற்கு மீனவ மக்களாகிய 28 கிராம மக்களும் இங்கே வரவில்லை. எங்களுக்கு இதுதான் வாழ்வு. இதுதான் பிழைப்பு. இதனை நம்பித்தான் நாங்கள் இருக்கிறோம். எங்கள் கிராம மக்கள் அனைவரையும் அப்புறப்படுத்திவிட்டு இத்தொழிற்சாலையை இங்கே கொண்டு வரலாம். மீனவ குடும்பங்களின் சார்பாக சொல்கிறேன், எந்த கருத்தை முன்னிட்டும் இந்த இடத்தில் எந்தவொரு தொழிற்சாலையும் வரக்கூடாது என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

<u>2. சட்டமன்ற உறுப்பினர், சிதம்பரம் சட்டமன்ற தொகுதி, சிதம்பரம், கடலூர் மாவட்டம்:</u>

தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகத் துறையில் வெளியிடப்பட்டுள்ள அறிவிக்கையின் 31–வது பக்கத்தில் இந்நிறுவனத்திற்கு மேற்கண்ட துறையின் அரசு ஆணை 183, நாள் 23.07.2007 மூலம் கப்பல் கட்டும் தளம் மற்றும் துறைமுகப் பகுதி அமைக்க அனுமதி அளித்து அரசிதழிலும் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கொள்கை ரீதியின் அளவிலே ஒரு சிங்கிள் சூப்பர் பாஸ்பேட் என்ற ரசாயன நிறுவனம் அமைக்கவும் அனுமதித்துள்ளதாகவும் தெரிவித்தார். ஆனால் இந்நிறுவனம் சிங்கிள் சூப்பர் பாஸ்பேட் என்ற ரசாயன தொழிற்சாலை பற்றிய எந்த விபரமும் தெரிவிக்காமல் கப்பல் கட்டும் தளம் மற்றும் துறைமுகம் பகுதி அமைப்பதற்கு மட்டுமே அறிவிக்கை வெளியிட்டு இக்கூட்டத்தை நடத்தி வருவதாக தெரிவித்தார். ஆகவே, முறையான கருத்துக்கேட்பு கூட்டமானது மேற்கண்ட இரண்டு தொழிற்சாலைகளும் ஒருங்கிணைத்து இப்பகுதி பொதுமக்களுக்கு தெரிவித்து நடத்திடல் வேண்டும் என்றும் இது முறையான கருத்து கேட்பு கூட்டம் அல்ல என்றும் தெரிவித்தார்.

மேலும், முறையான அறிவிப்பு இப்பகுதி மக்களுக்கு தெரிவிக்கப்படவில்லை என்றும் அதனால் அருகில் உள்ள வெள்ளிங்கராயன்பேட்டை பகுதி மக்கள் இக்கருத்து கணிப்பு கூட்டத்தை புறக்கணித்து கடந்த 5 நாட்களாக கடலுக்கு சென்று மீன்பிடி தொழிலில் ஈடுபடாமல் புறக்கணித்துள்ளார்கள் என்று தெரிவித்தார். மேலும், இப்பகுதியை சுற்றியுள்ள சுமார் 25 கிராமங்கள் இக்கருத்துக் கணிப்பு கூட்டத்தை புறக்கணித்துள்ளதாக தெரிவித்தார். ஆகவே, உண்மையாக பாதிப்புக்குள்ளாகி, இப்பகுதியை சுற் றியுள்ள சுமார் 10 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் உள்ள கிராம மக்களுக்கு முறையான அறிவிப்பு

தெரிவித்து அதன்பிறகு இக்கூட்டத்தை நடத்துமாறு கேட்டுக்கொண்டார். இந்த முறையான அறிவிப்பு இல்லாமல் நடத்தப்படும் இக்கருத்து கேட்பு கூட்டத்தை ரத்து செய்து மீண்டும் முறையான அறிவிப்புடன் ஒரு கூட்டம் நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இக்கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு மூல காரணமான சுற்றுச்சூால் தாக்க அறிக்கை (Environmental Impact Assessment Report)-யினை தயாரித்து அளித்திருப்பது அண்ணா பல்கலைக்கழகம், சென்னை. ஆனால் இந்த அறிக்கையினை தயாரிப்பதற்கு அண்ணா பல்கலைக்கழகம், சென்னை என்ற கல்வி நிறுவனத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அனுமதி இதுநாள் வரையில் வழங்கப்படவில்லை. மத்திய அரசிடம் அனுமதி பெறாத சென்னை அண்ணா பல்கலைக்கழகம் தயாரித்து துளித்துள்ள இந்த அறிக்கையின் மீது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்துவது என்பது அடிப்டையிலேயே பொருத்தமற்றது.

ஏற்கனவே கடலூர் சிப்காட் பகுதியில் இருந்து பெரியப்பட்டு வரையில் அமைந்துள்ள நிறைய இரசாயனத் தொழிற்சாலைகளால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலும், இப்பகுதியில் இதுபோன்ற கப்பல் கட்டும் தொழிற்சாலை, அனல் மின் நிலையங்கள் மற்றும் ரசாயன தொழிற்சாலைகள் அமைந்தால் இப்பகுதியில் சுற்றுச்சூழல் அதிகளவில் பாதிக்கப்பட்டு மீன்பிடித் தொழில் மற்றும் விவசாயத் தொழில் முற்றிலும் அழிக்கப்பட்டு ஏறக்குறைய 18000 மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுவிடும் என்று தெரிவித்தார். மேலும், வேலை வாய்ப்பிலும் முன்னுரிமை அளிக்கமாட்டார்கள் என்று தெரிவித்தார். மேற்கண்ட காரணங்களுக்காக இக்கருத்துக் கேட்பு கூட்டத்தை ரத்து செய்துவிட்டு மீண்டும் ஒரு கருத்துக்கேட்பு கூட்டத்தை கூட்டி மக்களின் கருத்துக்களை பதிவு செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

<u>3. ரமேஷ்பாபு (கடலூர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர்) :</u>

இந்த திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க அறிக்கையை தயாரித்த அண்ணா பல்கழகமானது இவ்வறிக்கை தயாரிப்பதற்கு மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் இல்லாத பல்கலைக்கழகம். இப்பகுதியில் இருந்து சுமார் 150 கிலோ மீட்டர் தொலைவில் காட்டுப்பள்ளியில் ஏற்கனவே ஒரு கப்பல் கட்டும் தளம் உள்ளபோதே இப்பகுதியில் மீண்டும் ஒரு கப்பல் கட்டும் தளம் அமைக்க என்ன அவசியம் உள்ளது என்று கூறினார். பொதுவாக இத்திட்டத்தின் திட்டச்சுருக்க அறிக்கையில் மீன்பிடித் தொழில் பாதிப்பு பற்றியோ, இத்திட்ட செயல்பாடுகள் குறித்தோ, மூலப்பொருட்கள் குறித்தோ விபரங்கள் தெளிவாக இல்லை என்று கூறினார். இப்பகுதியில் நிலம் கொடுத்தவர்களுக்கு வேலை கொடுக்காமல் எங்கள் நிலம் தங்களின் திட்டத்திற்கு ஏன் என்று வினவினார். மேலும், இத்திட்டத்தில் தமிழக அரசிடமிருந்து 5 மெகாவாட் மின்சாரம் வாங்கி உபயோகிக்கப்போவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மின்சாரத்தை தாங்களே உற்பத்தி செய்து பயன்படுத்தக்கூடாதா என்றும் கேட்டார். இத்திட்டத்தில் கடல் அரிப்பினால் இப்பகுதியில் ஏற்படும் பாதிப்பு குறித்து ஏதும் தெரிவிக்கப்படவில்லை. இத்திட்டத்தில் கா ற்று மாசு மற்றும் ஒலி மாசு சம்பந்தமாகவும் அதை கட்டுப்படுத்தும் முறைகள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். இக்கப்பல் கட்டும் தளம் அமைக்க இந்த இடம் கடல் மட்டத்தில் இருந்து சுமார் 5 மீட்டர் உயரம் தூக்கப்படும் என்று தெரிவித்துள்ளதால் இதனால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் பாதுகாப்பு முறைகள் இத்திட்டத்தில் தெளிவாக விளக்கப்படவில்லை. ஆகவே, இப்பகுதி மக்கள் கலந்து கொள்ளாத இக்கூட்டத்தை ரத்து செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

<u>4. செல்வகுமார் (பாட்டாளி மக்கள் கட்சி) ஒன்றிய செயலார், வில்லியநல்லூர் :</u>

இந்த கம்பெனி இங்கே தொடங்குவதைப் பற்றிய அறிவிப்பு இப்பகுதியில் வெளிவராத தினமணி நாளிதழில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வெளியிட்டுள்ளது. இதே போன்ற இரசாயன தொழி ற்சாலைகள் இங்கே கடலூரில் நிறைய இருப்பதால்தான் தாய்ப்பாலிலே நஞ்சு கலந்துள்ளதாக அமெரிக்க அறிவியல் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். மேலும் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும். நெய்வேலியில் சுரங்க வேலை அதிகம் நடைபெறுவதால் அதனைச் சுற்றியுள்ள 7 கி.மீ. தூரத்திற்கு உப்பு நீர் உள்ளே புகுந்துவிடும் அபாயம் உள்ளது என்று தகவல் தெரிவிக்கிறது. மேலும், இப்பகுதியில் அமைய உள்ள தொழிற்சாலைகளினால் இப்பகுதியில் சுமார் 10,000 ஏக்கர் பரப்பளவு நிலங்கள் உபரி நிலங்களாக மாற வாய்ப்புள்ளது என்று கூறினார். இயற்கைப் பேரிடர், சுனாமி போன்றவைகளால் தாக்கப்படும் மாவட்டமாக கடலூர் 2–வது இடம் வகிக்கிறது என்று புவிவியல் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர் என்று எடுத்துரைத்தார். நெய்வேலியில் நிலக்கரி வெட்டி எடுக்க நிலம் கொடுத்துவிட்டவர்கள் தற்பொழுது பி ச்சைக்காரர்களாக உள்ளனர் என்றார். இந்த நிலைமைதான் எங்களுக்கும் வந்துவிடும் என்று சொல்லி இந்த உரையை முடிக்கிறேன். மேற்கூறிய காரணங்களுக்காக இக்கருத்தாய்வு கூட்டத்தை ரத்து செய்து மீண்டும் ஒரு கருத்தாய்வு கூட்டம் நடத்தும்படி கேட்டுக்கொண்டார்.

5. திரு.எஸ். ராமநாதன், செம்மங்குப்பம் பகுதி சுற்றுச்சூழல் கண்காணிப்பாளர் :

இந்த சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை ஆய்வு செய்யாமலும், நிபந்தனைகளை குறிப்பிடாமலும் இக்கருத்துக் கணிப்பு கூட்டம் நடைபெறுவது முற்றிலும் தவறானது. 2007–ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க அறிக்கையினை கொண்டு 2011–ஆம் ஆண்டு பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடத்துவது எந்த அளவிற்கு சாத்தியமானது என்று தெரியவில்லை என்று தெரிவித்தார். இந்த சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை முற்றிலுமாக தமிழில் மொழி பெயர்ப்பு செய்யாமல் ஒரு சில பகுதிகள் மட்டுமே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். ஏற்கனவே அமைந்துள்ள துறைமுகங்களாலும், இனி வரவிருக்கும் துறைமுகங்களினாலும் இப்பகுதியில் மீன்பிடித் தொழில் பெருமளவில் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாக கூறினார். கடல் அரிப்பு மற்றும் அதன் தடுப்பு முறைகள் பற்றி ஏதும் அறிக்கையில் சரியில்லை என்று கூறி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இக்கூட்டத்தை தள்ளி வைக்க வேண்டும் அல்லது தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

6. இராமலிங்கம், வி.பஞ்சாங்குப்பம் :

பொதுவாக பத்திரிகைகளும், ஊடகங்களும் உண்மை நிலையினை மறைத்து பொய்யான தகவலை வெளியிடுகிறது. உண்மை நிலையினை வெளியிட்டால்தான் எங்களின் குடும்பங்கள் பாதிக்கப்படாமல் இருக்கும். நாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டோம். 2005 வரை இயற்கையான சூழ்நிலையில் குடும்பம் நடத்தி, சுத்தமான காற்றை சுவாதித்து வாழ்ந்து வந்தோம். இந்த கம்பெனி கட்டுவதற்கான இடம் நாங்களாக மனமுவந்து அளிக்கவில்லை. புரோக்கர்கள் எங்களிடம் அதிக சொத்து இருந்தால் விஜிலென்சால் பாதிக்கப்படுவோம் என்று கூறி எங்களை மிரட்டி, எங்களை ஏமாற்றி எங்கள் நிலத்தினை வாங்கிவிட்டனர். இதற்கான வேலைகளோ நியாப்படி நடந்தது அல்ல என்று கூறி எங்கள் மக்களின் நலன் பாதுகாக்கப்படவேண்டும் என்று கூறி என் மேலான உரையை முடித்துக்கொள்கிறேன்.

7. ஷாஜஹான் (பரங்கிப்பேட்டை) :

காலத்திற்கேற்றவாறு நோய்களும் புதிது புதிதாக மக்களைத் தாக்குகின்றன. அருகருகே உள்ள தொழிற்சாலையின் இரசாயன கழிவுகளால் எங்கள் பகுதியில் உள்ள மக்களிடம் கேன்சர் நோய் அதிகமாக பரவி வருகிறது. மீன்வளம் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து கொண்டு வருகிறது. ஒரு சில பேர் வாழ்வதற்கு இலட்சம் மக்கள் அழிவதா என்று கேட்கிறேன். பொதுமக்களின் கருத்துகளுக்கு மதிப்பு கொடுத்து இப்பகுதியில் இத்தொழிற்சாலை வருவதா அல்லது வேண்டாமா என்று ஆலோசனை செய்யுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன் என்று கூறினார்.

8. ரிசாயத் (பரங்கிப்பேட்டை) :

இந்த பகுதி மக்களில் இறப்போரில் 10–ல் 8 பேர் கேன்சரால் பாதிக்கப்பட்டுள்ளனர். 70 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு கேன்சர் உள்ளது. ஹிட்லர் எப்படி மக்களை ஓர் அறையில் அடைத்து விஷவாயுவை கசியவிட்டு கொன்றாரோ அதைப் போன்று நீங்களும் தொழிற்சாலை என்ற பெயரில் ஒன்றை ஆரம்பித்து எங்கள் மக்களையும் கொல்கிறீர்கள். இப்படிப்பட்ட இந்த தொழிற்சாலையை ஏன் இங்கு தொடங்குகிறார்கள். இது ஒரு கொடூரமான செயல். மக்களை கொல்லும் இந்த வகையான தொழிற்சாலை இந்தப் பகுதியில் வேண்டவே வேண்டாம் என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

9. தமிழ்ச்செல்வன் (வி.பஞ்சாங்குப்பம்) :

இந்த கம்பெனி ஆரம்பிப்பதற்கு முன்னே சுற்றி வேலியிட்டுவிட்டனர். நாங்கள் ஏற்கனவே ஆடு மாடுகளை கூட மேய்க்க முடியாமல் இருந்தோம். இப்போது மீதம் இருந்த இடத்திலும் கம்பெனியைச் சுற்றி வேலியிட்டுவிட்டதால் இடமின்றியும், ஆடு மாடுகளை மேய்க்க இயலாமலும் கஷ்டப்படுகிறோம். இதனால் மேலும் பாதிப்பு ஏற்படும் என்பதால் இந்த தொழிற்சாலை இவ்விடத்தில் அமைவதை தடுக்கிறோம் என்று கூறினார்.

10. மொஹம்மது நைனா (பரங்கிப்பேட்டை) :

குடிகாடு சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் நீர் ஆதாரமுள்ள இடமாக இருந்தது. தற்போது ஏற்கனவே தொழிற்சாலை அதிகமாக உள்ளதால் குடிதண்ணீர் அதிகம் எடுக்கப்பட்டு விட்டது. இப்பொழுதும் மேலும் தொழிற்சாலைகள் உற்பத்தி பெருகிக்கொண்டே போனால் குடிதண்ணீர் எல்லாம் எடுக்கப்பட்டுவிட்டு எங்களை அகதிகளைப் போன்று மாற்றுகிறீர்கள். தொழிற்சாலைகளில் பாதிப்பு அதிகமாக இருப்பதால் தற்பொழுது பிறக்கக்கூடிய குழந்தைகளோ ஒரு சில வருடங்களாகவே ஊனமுடன் பிறக்கின்றன. எந்த பகுதியில் மருத்துவ முகாம் நடத்தினாலும், அவர்கள் சரியான

அறிக்கை தராமல், கம்பெனிக்கு சாதகமாக எந்த பாதிப்பும் இல்லை என்று அறிக்கை கொடுத்துவிடுகிறார்கள். இத்திட்டத்தில் உற்பத்தியாகின்ற கழிவுநீரை சுத்தம் செய்து 70 சதவீதம் கழிவறைகளுக்கும், பசுமை வளர்ப்புக்கும் பயன்படுத்துவோம் என்று கூறுகிறார்கள். ஆனால் அப்படி செய்யமாட்டார்கள். மீதி 30 சதவீதத்தை பற்றி இத்திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. அடிக்கடி இப்பகுதிக்கு கப்பல் வந்து செல்வதினால் ஏற்படும் அதிர்வுகளால் மீன்கள் வாழமுடியாத சூழ்நிலை ஏற்படும் என்றும் அதனால் மீன்பிடி தொழில் முற்றிலும் பாதிக்கப்பட்டுவிடும் என்று தெரிவித்தார். இதையும் மீறி இத்திட்டம் வரக்கூடாது என்று கருத்து தெரிவித்தார்.

11. வி.எம்.சேகர் (இந்தியன் கம்யூனிட் கட்சி மாவட்ட செயற்குழு உறுப்பினர்) :

ஊடகங்கள் மூல்மாக செய்தி வெளியிட்டு நாங்கள் ஒப்புதல் பெற்றுவிட்டோம் என்று கூறுகிறார்கள். ஆனால் அதில் அந்த நிலத்தின் பரப்பு, அதனுடைய தொகை எவ்வளவு என்பது பற்றிய அறிவிப்பு எதுவும் தமிழில் இல்லை. இத்திட்டத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நிபந்தனைகள் என்னென்ன என்று இத்திட்டம் பற்றி விவரத்தினை முற்றிலும் தமிழிலேயே தரவேண்டும் என கேட்டுக் கொண்டார். இதனால் இப்பகுதி மக்களால் புரிந்து கொள்ள இயலவும் இல்லை. எனவே, தகவல்கள் முழுவதும் தமிழிலேயே தரப்படவேண்டும். நிலத்திற்கு 3, 4 இலட்சங்கள் மட்டுமே கொடுத்து ஏமாற்றி விட்டனர். உலகத்திலேயே தடை செய்யப்பட்ட அத்தனை மருந்து கம்பெனிகளும் சிப்காட் பகுதியில் அமைந்துள்ளன. எனவே, இத்திட்டத்தினை மறுபரிசீலனை செய்து இக்கூட்டத்தினை ரத்து செய்து விட்டு மீண்டும் தமிழிலேயே அனைத்து விபரங்களும் இப்பகுதி மக்களுக்கு அளிக்கப்பட்டு மீண்டும் ஒரு கருத்து கேட்பு கூட்டம் நடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். சிப்காட் அதிகாரிகளும் அங்கேயே ஒரு குடியிருப்பு கட்டி அதில் அவர்கள் வாழ்ந்து வந்தால் நாங்களும் இங்கே வசிக்கிறோம்.

12. மாதவன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் :

சட்டமன்ற உறுப்பினர் கூறியது போல் இக்கூட்டம் ஒரு தொழிற்சாலைக்கா அல்லது இரண்டு தொழிற்சாலைகளுக்கா என்று தெரியவில்லை என்கிற போது இக்கூட்டம் ஒரு ஏமாற்றுகிற வேலையாக உள்ளது என்று தெரிவித்தார். பாண்டி முதல் பரங்கிப்பேட்டை வரை எங்கும் தொழிற்சாலை மயமாகிவிட்டது. மக்களுக்கு அடிப்படை வாழ்வாதாரம் எதுவும் இல்லை. டான்பேக் போன்ற நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் பாய்லர்களில் விழுந்து பலியாகிறார்கள். மக்களுக்கு தேவையான முறையான மருத்துவ வசதி எதுவும் இல்லை. குடிப்பதற்கு சுத்தமான குடிநீர் கூட இல்லை. இரசாயன நீர் ஆற்றில் கலப்பதாலும் காற்று மாசுபடுகிறது. இதனால் இரசாயனம் கலந்த காற்றைத்தான் சுவாசிக்கிறோம். எல்லாவித நோய்களும் எங்களுக்கு உரித்தாகுகின்றன. இப்படிப்பட்ட தொழிற்சாலைகளால் இங்கு இருக்கக்கூடிய பொதுமக்கள் மற்றும் மீனவ மக்களின் வாழ்வுரிமை மற்றும் வாழ்வாதாரத்தை பறிக்கும்படியாக உள்ளது என்று கூறி இக்கூட்டத்தை ரத்து செய்து இந்நிறுவனம் இங்கு அமையவிடாமல் தடுக்கும்படி கேட்டுக்கொண்டார்.

13. அசோகன் (இந்திய மாநில வாலிப சங்கம் – மாவட்ட செயலாளர்) :

எனக்கு முன்னால் பேசியவர்கள் போல் இந்த மக்கள் கருத்து கேட்பு கூட்டம் என்பது வெறும் கண்துடைப்பு ஆகும். இப்பகுதியில் உள்ள படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றி வெளி மாவட்டங்களுக்கு செல்கிறார்கள். இங்குள்ள மண், நிலம், நீர் இவையனைத்தும் தொழில் நிறுவனங்களுக்கு தேவை. ஆனால், இப்பகுதி இளைஞர்கள் மட்டும் தேவையில்லை. ஆகவே, அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காதவண்ணம் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

14. அருள்செல்வன், சிப்காட் சுற்றுச்சூழல் கண்காணிப்பாளர் :

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனம் அமைச்சகம், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் 2009 ஆண்டு இணைந்து நடத்திய ஆய்வில் இந்தியாவிலேயே சுற்றுச்சூழல் பாதிப்பால் கடலூர் சிப்காட் பகுதி 16–வது இடத்தில் இருந்ததாக அறிவித்தது. இந்த சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை 2007 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. தற்பொழுது எல்லாவிதமான சுற்றுச்ழல் காரணிகள் மாறுபட்டிருக்கும் என்பதால், இது ஒரு பழைமையான அறிக்கை. இவ்வறிக்கையைக் கொண்டு
2011 ஆண்டு மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறுவதை நிராகரிக்கிறேன். சென்னை அண்ணா பல்கலைக்கழகம், மத்திய அரசால் அங்கீகரிக்கப்படாத ஒரு நிறுவனமானதால் இத்திட்ட அறிக்கை சட்டத்திற்கு புறம்பானது என்று கூறி இத்கூட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென கேட்டுக்கொண்டார். இத்திட்ட அறிக்கையின் 95–வது பக்கத்தில் தண்ணீர் பற்றி முழுமையான அறிக்கைத் தரப்படவில்லை.

மேலும், புவி வெப்பமடைதலை தடுக்கும் மாங்குரோவ் காடுகளும் அழிந்து வரும் நிலைமை உள்ளது. மேலும் இயற்கைப் பேரிடர்களைப் பற்றியும் விளக்கமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. எதையும் முறையாக செய்யவேண்டியும், இயற்கைப் பேரிடர்களிலிருந்து மக்களைக் காக்க வேண்டியும் கேட்டுக்கொண்டார். இக்கூட்ட ஏற்பாட்டிற்கு முறையான அறிவிப்பு 'டாம் டாம்' மூலம் அறிவிக்கப்படாதது தெரியவந்ததால் இக்கூட்டம் முறையாக நடைபெறவில்லை என்றும், சட்டத்திற்கு புறம்பாக நடைபெறும் இக்கூட்டத்தை ரத்து செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

15. ஆனந்தவேலு, தேசிய திராவிட முன்னேற்ற கழகம், இளைஞர் அணி ஒன்றிய செயலாளர், வில்லியநல்லூர் :

இங்கு வந்திருக்கும் கூட்டம் பணத்தால் மட்டுமே சேர்ந்த கூட்டம். இது மக்களின் குறைகளை உண்மையாக எடுத்துரைக்க வந்திருப்பவர்கள் அல்லர். இதில் உள்ள குறைகளை சட்டமன்ற உறுப்பினர் எடுத்துச் சொல்லியும் இந்த கூட்டம் நடைபெறுகிறது. இந்தக் கூட்டம் ஏன் நடைபெறுகிறது என்றே தெரியவில்லை.

16. தமிழ்சங்கர், வில்லியநல்லூர் :

செம்மாங்குப்பத்தில் ஒரு தொழிற்சாலைக்கு எதிரா போராட்டம் மனித உரிமைக் கழகம் மூலம் நடந்தது. அந்த மனித உரிமைக் கழகத்தைச் சார்ந்தவர்களையே சிறையில் அடைத்துவிட்டனர் என்றால் இந்த ஊர் மக்களின் கதி என்ன? எங்கள் சோற்றில் நஞ்சு கலக்க இருக்கிறார்கள். எங்களுக்கு சரியான நியாயம் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

17. கற்பக செல்வம், கிள்ளை பேரூராட்சி கவுன்சிலர் :

இந்த பகுதி சிறந்த வன பகுதியாக உள்ளது. இந்த வனப்பகுதிக்குள் பிச்சாவரம் மாங்குரோவ் காடுகள் வருவதால் அதற்கு சேர்த்து இத்திட்டம் ஆய்வு செய்யப்பட்டதா என்ற விபரம் தெரியவில்லை என்று கூறினார். இந்த வனப்பகுதி பாதிக்கும் வகையில்தான் இந்த திட்டம் உள்ளது. இந்த திட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான கருத்துக் கூறவே வந்தோம். ஆனால் இங்கு வந்தால் இரண்டு தொழிற்சாலைக்கான கருத்துக் கேட்பு கூட்டமாக உள்ளது. இது ஒரு ஏமாற்று வேலை. கழிவு நீர் சுத்திகரிக்கப்படாமலேயே கடலில் விடக்கூடாது. அப்படி விட்டால் மாங்குரோவ் காடுகள் உள்ள இடத்தில் தொழிற்சாலை ஆரம்பிக்கக் கூடாது என்று கூறி என் உரையை முடிக்கிறேன். இப்படி சுனாமி போன்ற இயற்கை பேரிடர்களை தடுக்கக்கூடிய மாங்குரோவ் காடுகளை அழிக்கக்கூடிய இத்திட்டம் இப்பகுதியில் அமையக்கூடாது என கேட்டுக் கொண்டார்.

18. நிஜாமுதீன், பரங்கிப்பேட்டை :

பொதுமக்களிடம் கருத்துக்கேட்பு கூட்டம் என்று நடத்துகிறார்கள். இது வரையில் வந்த கருத்துக்கள் அனைத்தும் மிக மோசமாக, எதிரான மற்றும் கண்டன கருத்துக்களாகவே பதித்துக்கொண்டிருக்கிறார்கள். சிப்காட் நாற்றத்தை போக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க என்ன செய்ய போகிறீர்கள். இந்த நாற்றமே மக்களை தின்றுவருகிறது. இறால் பண்ணைகளால் நிலத்தை இப்பகுதி மக்கள் அடிமாட்டு விலைக்கு விற்றுவிட்டனர். சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு மரத்தை நடுங்கள் என்று அரசாங்கம் சொல்கிறது. ஆனால் ஒருசிலர் சொகுசாக வாழ்வதற்கு காடுகளை அழித்து மரங்களை வெட்டி சாய்க்கிறார்கள். ஒரு சிலர் வாழ்வதாற்காக இப்பகுதி மக்கள் என் மடிய வேண்டும். நாகார்ஜுனா, சிப்காட் இவர்களெல்லாம் தொழிற்சாலை தொடங்கும் முன்பு இந்தப் பகுதியை சேர்ந்தவர்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்பு அளிக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த எத்தனைப் பேருக்கு இவர்கள் வேலை வாய்ப்பு அளித்துள்ளனர் என்ற புள்ளி விபரங்களை வெளியிடவேண்டும். மக்களை வாழவைப்பதற்குதான் அரசாங்கம். மக்களை சாகடிப்பதற்கு அல்ல. ஆகவே, மேற்கூறிய கருத்துக்களை மனதில் கொண்டு இக்கூட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

19. கோவிந்தராஜ், பஞ்சாங்குப்பம் :

இப்பகுதியில் 90 சதவீதம் ஏழை விவசாய மக்களும், படிப்பறிவில்லாத அடித்தட்டு மக்களும் வாழ்கிறார்கள். இப்பகுதி தற்போது சுடுகாடாக மாறி வருகிறது. இந்நிறுவனம் இங்கு அமைந்தால் நாங்கள் இப்பகுதியில் வாழமுடியாது என்று கூறினார்.

20. நிஜாமுதீன், செயலர், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டமைப்பு.

இக்கூட்டத்தில், இப்பகுதியில் வாழும் கடலோர மக்கள் எந்த கருத்தையும் இங்கு தெரிவிக்கவில்லை. எனவே, இது முழுமையான கருத்து கணிப்பு கூட்டம் அல்ல. மாவட்ட ஆட்சியர் அவர்கள் தங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி மீண்டும் ஒரு மக்கள் கருத்துக் கணிப்பு கூட்டம் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இப்பகுதியில் அமைந்துள்ள, அமையவுள்ள அனைத்து தொழிற்சாலைகளுக்கும் ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை தயாரிக்கும்படி மத்திய

அரசின் வழி காட்டுதல் உள்ளதால் அது மாதிரியான ஒருங்கிணைந்தூ சுற்றுச்சூழல் அறிக்கை தயார் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

இப்பகுதியில், கப்பல் போக்குவரத்திற்கு பயன்படும் வழிக்காக கடலில் பல ஆயிரம் டன் மணல் எடுக்கப்பட்டு ஆழப்படுத்தப்படும் சூழ்நிலை உள்ளதால் கடலூர் முதல் பரங்கிப்பேட்டை வரை உள்ள கடல் வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளதாக தெரிவித்தார். ஏற்கனவே எனது ஆட்சேபனைகளை கடிதங்கள் மூலமாக தெரிவித்துள்ளேன். அதன் கருத்தை கருத்தில் கொண்டு இப்பகுதி விவசாய மக்கள், மீனவ மக்கள் பாதிக்காதவண்ணம் சுற்றுச்சூழலை பாதுகாத்திடவும் வேண்டி மீண்டும் ஒரு கூட்டம் நடத்தி இப்பகுதி மக்களின் கருத்தை பெற்று இந்நிறுவனம் இப்பதியில் அமையும் திட்டத்தை கைவிட வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திரு.ஸ்ரீ ஆனந்த சாய், உதவி மேலாளர், தி/ள் குட் எர்த் ஷிப் பில்டிங் பிரை–ரவேட் லிமிடெட் மேற்கண்ட கருத்துகளுக்கு பதிலளித்து பேசுகையில், இப்பொழுது நடைபெறும் கூட்டம் கப்பல் கட்டும் தளம் மற்றும் துறைமுகம் பகுதி அமைக்க மட்டுமே என்பதாகவும் எவ்வித ரசாயன தொழிற்சாலைக்கும் அல்ல என்று தெரிவித்தார். இப்பகுதி மக்களுக்கு முறையான அறிவிப்பு செய்தித்தாள்கள் மூலமாகவும், ஒலிபெருகி மூலமாகவும் முடிந்தவரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். சுற்றுச்சூழல் தாக்க அறிக்கையானது 2007 ஆம் ஆண்டு சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தால் தயாரிக்கப்பட்டது. அப்பொழுது இவ்வறிக்கையை தயாரிக்க நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கும் வழக்கம் மத்திய அரசிடம் இல்லை. அப்படி அனுமதி அளிக்கும் வழக்கம் 2010–ம் ஆண்டு முதல் அமலாக்கத்தில் உள்ளதாக தெரிவித்தார்.

கூட்டத்தின் முடிவில் மாவட்ட ஆட்சியர் பேசுகையில் முறையாக விளம்பரம் செய்யப்படவில்லை என்றும், இப்பகுதி மக்களுக்கு தெரிவிக்கவில்லை என்றும் மத்திய அரசிடம் அனுமதி பெறாத நிறுவனமான சென்னை, அண்ணா பல்கலைக்கழகம் இந்த இக்கூட்டத்திற்காக சுற்றுச்சூால் தாக்க அறிக்கை தயாரித்து இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் இங்கே பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். மேலும், பொதுமக்கள் தெரிவித்த கருத்துக்கள், ஆட்சே–பனைகள் முழுமையாக பதிவு செய்யப்பட்டு உரிய அலுவலர்களுக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்தார். இந்த கூட்டத்தில், இத்திட்டம் இப்பகுதியில் வருமா அல்லது வராதா என்ற முடிவு எடுக்கும் அதிகாரம்

இங்கிருக்கும் யாருக்கும் இல்லை என்றும், உங்கள் கருத்துக்களை கேட்டு அனுப்பும் பணி மட்டுமே எங்களது பணி என்றும் தெரிவித்தார்.

இறுதியாக இக்கூட்டத்திற்கு வருகைபுரிந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து மக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

ஒம்/– xxxx 27.07.2011
மாவட்ட ஆட்சியர்,
கடலூர் மாவட்டம்.

–/ உண்மை நகல் /–

ஒம் /–xxxxx 02.08.2011.
மாவட்ட சுற்றுச்சூழல்பொறியாளர்,
த.மா.க.வாரியம், கடலூர்.